அ.வ.எண். 42/2014
நாள்.07/03/2019
<u>பெயர்- வெங்கடேசன் த.பெ. கிருஷ்ணன்.</u>
<u>வாதி தரப்பு 1ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்</u>
<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் தந்தை பெயர் கிருஷ்ணஆச்சாரி. என் தாத்தா பெயர் ராமசாமி. ஆபத்வாந்தகன் என் சித்தப்பா. ராமசாமி என்பவர்மகன்கள் தான் கிருஷ்ணஆச்சரி மற்றும் ஆபத்வாந்தகன் என்றால் சரிதான். ராமசாமி மற்றும் கோவிந்தசாமி ஆகியோரின் தந்தை பெயர் முத்து ஆச்சாரி. என் தந்தைக்கு இரண்டு மகன்கள். பெண்கள் 4 போர் உள்ளார்கள். அவர்கள் கே. விஜயா, கே. தங்கமணி, கே. பூங்கொடி, கே. நீலாம்பாள். தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில் உள்ளது. தாவா சொத்தின் பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்கள் யாருடைய பெயரில் உள்ளது என்றால் கிரய பத்திரம் ரவி, கார்ல்மார்க்ஸ், புத்திரன் பெயரில் உள்ளது. மற்ற வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் பெரிய தாத்தா சொத்து எனக்கு வரவேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துளேன். என் பெரிய தாத்தா பெயர் கோவிந்தஆச்சரி ஆகும். என் தாத்தா பெயர் ராமசாமி. பெரிய தாத்தாவுக்கு ஒரு பெண் இருந்தார் அவர் பெயர் ஜெயலட்சுமி ஆகும். என் பெரிய தாத்தா சொத்து அவரது மகள் ஜெயலட்சுமி என்பவருக்கு தான் சேரவேண்டுமென்றால் சரிதான். ஜெயலட்சுமி எனக்கு பெரிய தாத்தா வகையில் அத்தை ஆகும். நேரடி அத்தை கிடையாது என்றால் சரிதான். ஜெயலட்சுமி அவரது தந்தை இறந்த பிறகு அவரது சொத்தை 1ம் பிரதிவாதி பூபதிக்கு தானம் எழுதிகொடுத்து விட்டார் என்றால் சரியாக தெரியவில்லை இருக்கலாம். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. தானசெட்டில்மெண்ட் எழுதிய பிறகு அனைத்து வருவாய் ஆவணங்கள் 1ம் பிரதிவாதி பெயரில் தான் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் அனுபவம் பூபதி பெயரில் தான் இருந்தது என்றால் சரியல்ல. பூபதி மற்றும் அவரது வாரிசுதாரர்கள் தாவா சொத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். என்னுடைய பெரிய தாத்தா சொத்தை அவரது வாரிசான ஜெயலட்சுமி அடைந்து 1ம் பிரதிவாதிக்கு தானம் மூலம் கொடுத்து அதை 2, 3 பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ளார்கள் நான் சொத்து வேண்டுமென்றால் என்னுடைய தாத்தாவிடம் கேட்டு தான் தாக்கல் செய்ய வேண்டும் பெரிய தாத்தா சொத்து பேரில் நான் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. என் தாத்தாவுக்கு தனியாக சொத்து இருந்தது என்றால் சரிதான். என் தாத்தாவுக்கு பிறகு என் தந்தைக்கு வந்தது என்றால் என் தந்தை இறந்து விட்டதால் எனக்கு வந்தது. ராமசாமி சொத்து என்னிடம் உள்ளதா என்றால் இரண்டு சொத்தும் என்னிடம் உள்ளது. என் சொந்த தாத்தா சம்பாதித்த சொத்து என்னிடம் எவ்வளவு உள்ளது என்றால் 9 ஏக்கர் உள்ளது. முருகன் என்பவர் என் தம்பி ஆவார். முருகன் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முருகன் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகி விட்டது என்றால் தெரியாது. முருகன் என் சொந்த தம்பி அவரிடம் பேச்சு வார்த்தை உள்ளது. முருகன் தாக்கல் செய்த வழக்கு எனக்கு தெரியும் அது தள்ளுபடி ஆன விவரம் எனக்கு தெரியும் வேண்டுமென்றே வழக்கு நிலுவையில் இருக்க வேண்டும் என்று பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அ.வ.எண்.289/1984 வழக்கு பற்றி சொல்லி உள்ளேன் அந்த வழக்கு யார் யார் மீது போட்டது என்றால் என் தாத்தா ஜெயலட்சுமி, பூபதி மீது அந்த வழக்கை போட்டார். அந்த வழக்கு ஜெயலட்சுமி பூபதிக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான். ஒருதலைபச்ச தீர்ப்பாகும். 1978ல் குத்தகை ஒப்பந்த தாவா சொத்து பொறுத்து எழுதப்பட்டது என்று சொல்லி உள்ளேன் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை ஒட்டி

வருகிறேன் என்று சொல்லி உள்ளேன் அதற்கு அடங்கல் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பூபதியிடமிருந்து 2, 3 பிரதிவாதிகள் நிலம் வாங்கிய பின் சுவாதீனம் அடைந்து வருவாய் ஆவணங்கள் பெற்று 2, 3 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சீனிவாசன் என்பவர் என் சித்தப்பா ஆபத்வாந்தகன் மகன் ஆகும். அவரை வைத்து சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர் தாக்கல் செய்துள்ளார் அதில் எனக்கு சம்மன் வந்தது. அந்த வழக்கு எனக்கு தெரியும். அது என்ன வழக்கு என்றால் அந்த வழக்கு சரியில்லை என்பதால் நடத்தவில்லை. இந்த வழக்கு சொத்து பிரச்சனைக்காக தான் அந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு பாகப்பிரிவினை கேட்டு போடப்பட்ட வழக்கு என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் மெக்கானிக்கா ஊத்தங்கரையில் வேலை செய்து வருகிறேன். அந்த வழக்கு விவரம் எனக்கு தெரியும் அந்த வழக்கை பாகப்பிரிவினைக்காக பிரதிவாதிகளை ஏமாற்றுவதற்காக நாங்கள் எல்லம் சேர்ந்து போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நாங்கள் தாவா சொத்தை குத்தகை ஒட்டுவதால் எதிரிடை அனுபவப்படி உரிமையை விளம்புகை செய்ய கேட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு போடுவதற்கு முன்பு என் சகோதரர் முருகன் குத்தகை ஒட்டுவதற்காக எதிரிடை அனுபவப்படி உரிமை கோரி அந்த வழக்கு தள்ளுபடிஆகி உள்ளது இந்த வழக்கை என் குடும்பத்தாரும் ஒன்று சேர்ந்து பிரதிவாதிகளுக்கு இடையூறு கொடுக்க வேண்டி தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வாதிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் தாத்தா சொத்து ஜெயலட்சுமி, பூபதி சொத்துக்களும் பக்கத்து பக்கத்து நிலங்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தில் அத்து மீறி நுழைந்ததால் குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் பெயரில் எந்தவிதமான ஆவணமோ இல்லாத நிலையில் 2, 3 பிரதிவாதிகள் வாங்கிய சொத்தை அபகரிக்க வேண்டி வேண்டுமென்றே தொல்லை கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் பெற அருகதை அல்ல அந்த வழக்கு வியாஜிய மூலம் தவறு என்றால் சரியல்ல. என்னுடைய தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.